புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
June-2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS

# சிலப்பதிகாரம் காட்டும் தொல்காப்பிய இளமைப் பெயர்கள்

*ச. தீபா,*
*பதிவு எண்: R20162878,*
*முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*இராமசாமி தமிழ்க் கல்லூரி,*
*காரைக்குடி-630003.*

*முனைவர் செ. நாகநாதன்,*
*முதல்வர் (பொ), உதவிப் பேராசிரியர்,*
*நெறியாளர்*
*இராமசாமி தமிழ்க் கல்லூரி,*
*காரைக்குடி-630003.*

ஆய்வுச் சுருக்கம்

*ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று சிலப்பதிகாரம் ஆகும். கண்ணகியின் காற்சிலம்பினால் தோன்றிய கதையை விளக்கும் தன்மையில் அமைந்தது சிலப்பதிகாரம் என்னும் காப்பியமாகும். சாதாரண மக்களின் வாழ்வியலை மையமிட்டு படைக்கப்பட்டதால் சிலப்பதிகாரம் குடிமக்கள் காப்பியம் எனப் பெயர் பெற்றது. இயல், இசை, நாடகம் மூன்றிலும் சிறப்புப் பெற்று விளங்கும் இதனை முத்தமிழ்க் காப்பியம் என்றும் போற்றப்படுகின்றது. இசை, நாடகம் இவ்விரண்டையும் இயல்களால் காட்சிப்படுத்திக் காட்டுவதாகப் படைக்கப்பட்டுள்ளது. இலக்கண மரபுகளைச் செறிவுடன் கையாண்டுள்ளது. தொல்காப்பியம் காட்டும் மரபியலில் அமைந்த இளமையைக் குறிக்கும் பெயர்கள் சிலப்பதிகாரத்திலும் பயின்று வந்துள்ளன. சிலப்பதிகாரம், தொல்காப்பியம் காட்டும் இளமைப் பெயர்கள் பெறும் உயிர் வகைமையில் மாற்றம் பெற்றும், புதிய சொற்களால் இளமைப் பெயர்களை விளக்குவதாகவும் இயற்றப்பட்டுள்ளது.*

முன்னுரை

*தொன்மையான செய்திகளைக் காத்தியம்புவது தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலாகும். தொல்காப்பிய காலத்து மரபுச் செய்திகளை விவரிக்கும் வகையில் மரபியல் என்னும் தனித்த இயலமைப்பு படைக்கப்பெற்றுள்ளது. மரபியலில் அனைத்து உயிர்களுக்குமான மரபுப் பெயர்களையும் அப்பெயர்களுக்கு உரிய உயிரினங்களையும் வகைப்படுத்திக் காட்டியுள்ளது. மரபியல் விளக்கும் இளமைப் பெயர்கள் சிலப்பதிகாரத்தில் பயின்று வந்துள்ள முறையினை விரித்தும் பகுத்தும் காட்டும் நிலையில் விளக்கவியல் அணுகுமுறையும், பகுப்பாய்வு அணுகுமுறையும் கையாளப்பட்டுள்ளன. முழு முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்தின் மரபுவழி இளமைப் பெயர்களைத் தமிழ் முதல் காப்பியமான சிலப்பதிகாரத்தில் பயின்று வந்துள்ள இளமைப் பெயர்களுடன் ஒப்புமைப்படுத்தி நோக்கும் வகையில் ஒப்பீட்டு அணுகுமுறையும் இவ்வாய்வில் பின்பற்றப்பட்டுள்ளது.தொல்காப்பிய மரபியல் காட்டும் இளமைப் பெயர்களின் மரபுநிலை மாறாத வண்ணம் சிலப்பதிகாரத்தில் அமைந்துள்ளமையைக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

இளமைப்பெயர்கள்

*உலகின் அனைத்து உயிர்களுக்கும் பொதுவான நிலை அல்லது பருவம் தான் இளமை ஆகும்.*

“மாற்றரும் சிறப்பின் மரபியல் கிளப்பிற்
பார்ப்பும் பறழும் குட்டியும் குருளையும்
கன்றும் பிள்ளையும் மகவும் மறியுமென்
றொன்பதும் குழவியொ டிளமைப் பெயரே”. *(தொல்.மரபு.1)*

*என இளமைப் பெயர்கள் பார்ப்பு, பறழ், குட்டி, குருளை, கன்று, பிள்ளை, மகவு, மறி, குழவி என்ற ஒன்பது பெயர்களைக் கொண்டதாகத்தான் அமையும் என்பதைத் தொல்காப்பியரின் மரபியல் குறிப்பிடுகின்றது. ஒவ்வொரு உயிருக்குமான இளமைப் பெயர்கள் இன்னின்ன எனத் தனித்தனியாகத் தொல்காப்பியம் வகுத்தளித்துள்ளது. அவை,*

*பார்ப்பு – பறவை, தவழ்பன (ஊர்வன), குரங்கு.*

*பறழ் – மூங்கா (கீரி), வெருகு (மூஞ்சூறு), எலி, மூவரி அணில், நாய், பன்றி, புலி, முயல், நரி, குரங்கு.*

*குட்டி - மூங்கா (கீரி), வெருகு (மூஞ்சூறு), எலி, மூவரி அணில், நாய், பன்றி, புலி, முயல், நரி, குரங்கு.*

*குருளை – நாய், பன்றி, புலி, முயல், நரி.*

*கன்று – யானை, குதிரை, கழுதை, கடமை, மான், எருமை, மரை, கவரி(மான்), கராகம்(கரடி), ஒட்டகம்.*

*பிள்ளை – பறவை, ஊர்வன, பன்றி, புலி, முயல், நரி, குரங்கு.*

*மகவு – குரங்கு, மக்கள்.*

*மறி – ஆடு, குதிரை, நவ்வி (மான்), உழை, புல்வாய்.*

*குழவி – யானை, ஆ, எருமை, கடமை, மரை, குரங்கு, முசு, ஊகம், மக்கள்.*

*பிள்ளை, குழவி, கன்று, போத்து – நெல், புல், மரம்.*

*முதலியனவாகும்.*

*ஆளி, சிங்கம், புலி, யானை, குரங்கு, கரடி முதலியவற்றின் குட்டிகள், வரையாடுகள், வருடைமான்கள், இளைய மான் குட்டிகள், கந்தூரி மான் குட்டிகள், கீரிப்பிள்ளைகள், ஆண்மயில்கள், புனுகுப் பூனைக் குட்டி, கானக்கோழி, கிளிகள் ஆகியவற்றை மலைவாழ் வேட்டுவ மக்கள் சேரன் செங்குட்டுவனுக்குத் திறையாகத் தலையில் சுமந்து வந்தனர் .*

*“ ஆளியி னணங்கு மரியின் குருளையும்*
*வாள்வரிப் பறழு மதகரிக் களபமும்*
*குரங்கின் குட்டியுங் குடாவடி யுளியமும்*
*வரையாடு வருடையு மடமான் மறியும்*
*காசறைக் கருவு மாசறு நகுலமும்*
*பீலி மஞ்ஞையு நாவியின் பிள்ளையும்*
*கானக் கோழியுந் தேன்மொழிக் கிள்ளையும்*
*மலைமிசை மாக்க டலைமிசை கொண்டாங்”  (சிலப்.25:48-55)*

*எனச் சிலப்பதிகாரத்தில் அணங்கு, குருளை, பறழ், களபம், குட்டி, உளியம், மறி, கரு, பிள்ளை என்பன அனைத்தும் இளமையைக் குறிப்பதாக அமைந்துள்ளன. சிங்கம், புலி, குரங்கு, மான், பூனை இவற்றின் இளமைப் பெயர்களாகக் குருளை, பறழ், குட்டி, மறி, பிள்ளை என்னும் வரிசையில் மரபுநிலை மாறாது இடம்பெற்றுள்ளன.*

*குருளை*

*குருளை “ஆமை; இளமை; நரி, நாய், பன்றி, புலி, மான், முசு, முயல், யாளி இவற்றின் குட்டி; ஒருசார் விலங்கின் இளமை; பாம்பின் குட்டி.” என்னும் பொருண்மையில் அமைந்து வருவதாகக் கழகத் தமிழ் அகராதி குறிப்பிடுகின்றது. கொற்றவை கோலமிட்ட வேட்டுவ குமரியின் கூந்தலினைச் சிறுவெள்ளைப் பாம்புக்குட்டி போன்று செய்த பொன் கயிற்றினால் சுற்றினர்.*

*“சிறுவெள் ளரவின் குருளைநாண் சுற்றிக்”  (சிலப்.12:22)*

*குருளை பாம்பின் இளமைப் பெயராக இங்கு பயின்று வந்துள்ளது. ஆனால் மரபியலில் பாம்பின் இளமைப் பெயராக இதனைக் குறிப்பிடவில்லை.*

*பிள்ளை*

*“அணில், அன்றிற்குஞ்சு, இளமையோன், காரிக்குருவி, காகம், கிளி, கீரி ஆகியவற்றின் இளமைப்பெயர்; தெங்கு கமுகு இவற்றின் கன்று; நாகணவாய்ப்புள்; பறவைக்குஞ்சு; பன்றி, பூனை, மான், முயல் இவற்றின் குட்டி; மகன்; மரக்கன்று; வெள்ளாளரின் பட்டப்பெயர்.”எனக்*

*கழகத் தமிழ் அகராதி பிள்ளைப் பெயருக்கு விளக்கமளிக்கின்றது. மாடலனுக்கு கீரிப்பிள்ளை இறந்த துயரம் பெரிதாகத் தோன்றுகிறது.*

*"பிள்ளை நகுலம் பெரும்பிறி தாக" (சிலப்.15:54)*

*தொல்காப்பிய மரபியலில் கீரியின் இளமைப் பெயர்களாகக் குட்டி, பறழ் என்னும் இரண்டினையும் குறிப்பிட்டுள்ளன. அதற்கு மாறாக இங்கு பிள்ளை என்ற இளமைப் பெயர் பெற்று வந்துள்ளது.*

*மறி*

*ஆயர்கள் ஆட்டுக்குட்டியை ஒருதோளிலும், கோடாரி மற்றும் உறியை மற்றொரு தோளிலும் சுமந்துச் சென்றனர்.*

*"மறித்தோ ணவியத் துறிக்கா வாளரொடு" (சிலப்.15:205)*

*கூடல் நகரிற்கு வரவிருக்கும் துன்பதை முன்கூட்டியே அறிந்தன போல் ஆட்டுக்குட்டிகள் ஆடாமல் அசையாமல் சோர்ந்து கிடக்கின்றன.*

*"மறிதெறித் தாடா வருவதொன் றுண்டு;" (சிலப்.17:3)*
*"மறி முடங்கி யாடாமையும்" (சிலப்.17:5)*

*மறி என்னும் இளமைப் பெயர் மரபியல் முறைப்படி ஆட்டுக்குட்டியைக் குறிப்பதாக இடம்பெற்றுள்ளது.*

*கன்று*

*"அற்பம்; இளமரம்; எருமை; கடமை; ஒட்டை முதலியவற்றின் குட்டி; கன்றென்னேவல்; கைவளை;மரக்கன்று." எனக் கழகத் தமிழ் அகராதியும்,*

*"ஆன்கன் றினமுஞ் சிறுமையுங் கையின்*
*வளையு மிளைய மரமிங் கன்றே" (பிங்கலம்.3336)*

*பசுவின் கன்று, சிறுமை, கைவளை, மரக்கன்று எனப் பிங்கல நிகண்டும் கன்று என்னும் சொல்லிற்குப் பொருள் வழங்குகின்றன. கன்றுகளுடனிருக்கும் பிடியானைத் திரளுடன் களிற்றினமும் நடுங்குமாறு குன்றுகள் நிறைந்த மலை நாட்டிலே வெயில் நிலைப்பெற்று நின்றது.*

*"கன்றம ராயமொடு களிற்றின நடுங்க*
*என்றூழ் நின்ற குன்றுகெழு நன்னாட்டுக்*
*காடுதீப் பிறப்பக்" (சிலப்.14:120-122)*

*கன்றிக்குப் பாலூட்டும் நேரம் வந்ததால் பசுக்கள் கன்றினை நினைத்து உரத்த குரலில் கதறிக் கொண்டிருந்தன என அடைக்கலக் காதையும், கறவைகள் கன்றுகள் இவற்றின் துயர் நீங்க ஆயர்கள் குரவையாடினர் என்றும், மாயவன், ஆநிரை மேய்க்கும் இடத்திலிருந்த விளவின் கனியை உதிர்க்க வேண்டி அவ்விடத்தில் மேய்கின்ற பசுவின் கன்றினைக் குறுந்தடியாகக் கொண்டு கனிகளை உதிர்த்தான் என்றும் ஆய்ச்சியர் குரவையும், பசுக்களும் அவற்றின் கன்றுகளும் கனலுகின்ற எரியினிடத்துச் சேராது ஒதுங்கின என அழற்படு காதையும் குறிப்பிடுகின்றன.*

*"கன்றுதே ராவின் கனைகுர லியம்ப" (சிலப்.15:204)*
*"கறவைகன்று துயர் நீங்குக வெனவே" (சிலப்.17:5)*
*"கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்" (சிலப்.17:19)*
*" கறவையுங் கன்றுங் கனலெரி சேரா" (சிலப்.22:115)*

*கன்று எனும் இளமைப் பெயர் சிலப்பதிகாரத்தில் ஆ மற்றும் யானை இவற்றின் இளமையைக் குறிப்பதாக அமைந்துள்ளது. கன்று இளமைப் பெயர் ஆவிற்கு உரியதாகத் தொல்காப்பிய மரபியல் குறிப்பிடவில்லை.*

*மகவு, குழவி*

*"குழவியும் மகவும் ஆயிரண் டல்லவை*
*கிழவ அல்ல மக்கட் கண்ணே." (தொல்.மரபு.23)*

*குழவி, மகவு இவ்விரண்டு மட்டுமே மக்களைக் குறிக்கும் இளமைப் பெயராக அமையும் என மரபியல் குறிப்பிடுகின்றது. இளைய நிலவானப் பிறைச் சந்திரனைத் தலையில் சூடியவன் சிவன்.*

*"குழவித் திங்க ளிமையவ ரேத்த" (சிலப்.2:38)*

*மாலதி என்பவள் தனது மாற்றாள் குழந்தைக்குத் தன் முலையில் சுரந்த பாலினை ஊட்ட ஊழ்வினைப் பயனால் அக்குழந்தை இறக்க நேரிட்டது. அதன் பின்னர் மாலதி பாசண்டசாத்தன் கோட்டத்திற்குச் சென்று ஏங்கி அழும் இவளின் நிலையைக் கண்டு மனமிரங்கிய சாத்தன் 'உன் குழந்தை உயிருடன்தான் உள்ளது' எனக் கூறிவிட்டு தானே மாயக் குழந்தையாக உருமாறி அத்தாயின் துயரினைக் களைந்தான்.*

*"மாலதி மாற்றாண் மகவுக்குப் பாலளிக்கப்" (சிலப்.9:5)*

*"அஞ்ஞைநீ யேங்கி யழலென்று முன்னை*
*உயிர்க்குழவி காணாயென் றக்குழவி யாயோர்*
*குயிற்பொதும்பர் நீழற் குறுக வயிர்ப்பின்றி*
*மாயக் குழவி யெடுத்து மடித்திரைத்துத்*
*தாய்மைக் கொடுத்தாளத் தையலா டூய" (சிலப்.9:24-28)*

*"மாற்றாள் குழவிவிழத் தன்குழவி யுங்கிணற்று*
*வீழ்த்தேற்றுக் கொண்டெடுத்த வேற்கண்ணாள்" (சிலப்.21:18-19)*

*"மாலதி யென்பாண் மாற்றாள் குழவியைப்*
*பால்சுரந் தூட்டப் பழவினை யுருத்துக்*
*கூற்றுயிர் கொள்ளக் குழவிக் கிரங்கி*
*ஆற்றாத் தன்மைய ளாரஞ ரெய்திப்*
*பாசண் டன்பாற் பாடு கிடந்தாட்*
*காசில் குழவி யதன்வடி வாகி*
*வந்தன னன்னைநீ வான்றுய ரொழிகெனச்" (சிலப்.30:74-80)*

*பிறர் ஈன்ற குழந்தையைப் பாதுகாத்து வளர்க்கும் சான்றோரும் கூடல்நகரில் உள்ளரோ? என்றாள் கண்ணகி. பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப் பெண்கள், முதுமையாளர், குழந்தைகள் என இவர்களைக் கைவிட்டுத் தீய குணமுடையோர் பக்கம் பேரழல் சேர்க என்று கண்ணகி தீக்கடவுளை ஏவினாள்.*

*"ஈன்ற குழவி யெடுத்து வளர்க்குறூஉம்*
*சான்றோரு முண்டுகொல் சான்றோரு முண்டுகொல்" (சிலப்.19:55-56)*

*"பார்ப்பா ரறவோர் பசுப்பத் தினிப்பெண்டிர்*
*மூத்தோர் குழவி யெனுமிவரைக் கைவிட்டுத்*
*தீத்திறத்தார் பக்கமே சேர்கென்று" (சிலப்.21:53-55)*

*குழவி, மகவு என்னும் இரு இளமைப் பெயர்களும் மரபியல் முறைப்படி மக்களைக் குறிக்கும் நிலையில் அமைந்துள்ளன. இவற்றுள் குழவி மட்டும் பிறைச் சந்திரனைக் குறிப்பதாகப் பயின்று வந்துள்ளது.*

## *முடிவுரை*

*சிலப்பதிகாரத்தின் கதைக் களத்துடன் தொடர்புடைய பல்வேறு நிலைக்களங்களையும் இக்காப்பியம் விவரிக்கின்றது. இவற்றுள் இளமைப் பெயர்கள் பற்றிய செய்திகளும் இடம் பெற்றுள்ளன. தொல்காப்பிய மரபியல் சுட்டும் இளமைப் பெயர்களுடன் சிலப்பதிகாரத்தில் அமைந்துள்ள இளமைப் பெயர்களும் பொருந்தி வந்துள்ளன. இருப்பினும் அணங்கு, களபம், உளியம், கரு போன்ற இளமையைக் குறிக்கும் பெயர்கள் மரபியலில் இடம் பெறவில்லை. குழவி திங்கள், அரவின் குருளை, பிள்ளை நகுலம், ஆவின் கன்று, அரியின் குருளை, நாவியின் பிள்ளை முதலியன சிலப்பதிகாரத்தில் இம்முறையில் பயின்று வந்துள்ளன. ஆனால் மரபியல் விளக்கும் இளமைப் பெயர்களுக்கான உயிர்களின் வகைப்பாட்டில் இவை மாற்றம் பெற்று அமைந்துள்ளன.*

துணைநூற் பட்டியல்

1. கழகப் புலவர் குழுவினர் – கழகத் தமிழ் அகராதி, கழக வெளியீடு, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம். லிமிடெட், சென்னை – 1, 101 வது பதிப்பு – 2017.
2. சாமிநாதையரவர்கள் .வே – சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும், கபீர் அச்சுக்கூடம், சென்னை, ஆறாம் பதிப்பு – 1955.
3. பிங்கல முனிவர் – பிங்கல நிகண்டு மூலமும் உரையும், கழக வெளியீடு, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம். லிமிடெட், சென்னை – 1, முதற்பதிப்பு – பிப்ரவரி 1968.
4. வெள்ளைவாரணன் .க – தொல்காப்பியம் மரபியல் உரைவளம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை – 625021, முதற்பதிப்பு – 1994.

********* ********* ********** ********* ********* ********** ********** **********